5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன்: (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க சட்டச் முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. மொழிப்போர் தியாகிகளைப் போற்றி நினைவு கூர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மொழிப் போர் தியாகிகள் தினம் என்பதையொட்டி ஒரு செய்தி:

மொழிக்காகத் தங்களைத் தந்து தியாக
முத்திரை குத்தியோர் பல்லோர்

வழித்தோன்றல் வாழ்வாங்குவாழ தங்கள்
வாழ்வையே ஈந்தவர் நல்லோர்

எழிலான தமிழ்மொழி சிறக்க நாம்
எல்லோரும் பணியாற்ற வேண்டும்

மொழிக்காக இன்னுயிர் ஈந்தோர் தம்மை
முறையாக நாம் போற்ற வேண்டும்.